# அச்சிதழ்கள் இணையத்தில் பெற்றுள்ள மாற்றங்கள்

# Changes made by Print Magazines on the Internet

***முனைவர் ந. ஞானமணி***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
செயின்ட் ஜோசப் கல்லூரி (கலை மற்றும் அறிவியல்), சென்னை, இந்தியா

**Dr. N. Gnanamani**
*Assistant Professor, Department of Tamil*
*St. Joseph's College (Arts & Sciences)*
*Chennai, India*

## ஆய்வுச் சுருக்கம்

*சிற்றிதழுக்கான பண்புகளுடன் உலகம் முழுவதிலும் இருந்து இணைய இதழ்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றைக் காணும்போது இன்று இணையத்தில் தமிழின் செல்வாக்கு எந்தளவிற்கு உயர்ந்துள்ளது என்பதை நம்மால் அறிய முடிகிறது. இணையத்தில் இதழியல் என்று ஒரு தனித்துறையாக இயங்கும் அளவிற்கு இன்று இணைய இதழ்கள் உருவாகி வருகின்றன. இவற்றைக் காணும்போது வாசகர்களிடையே செய்திகளை வழங்கிவருகிற அச்சிதழ்களும் இன்று தொழில்நுட்ப வசதிக்கேற்ப தம்மை இணையத்தில் இணைத்துக் கொண்டு வெளிவருகின்றன. அவ்வாறு இணையத்தில் ஏற்றம்பெற்று வருகிற அச்சிதழ்களை மீள்பிரபிரசுரமாக கருதலாம். அவ்வாறு இணையத்தில் மீள்பிரசுரமாக வெளிவருகிற அச்சிதழ்கள் எவ்வாறு தம்மை மாற்றத்திற்கு உட்படுத்தி இணையத்தில் வெளிவருகின்றன என்பதை ஆய்வதே இக்கட்டுரை.*

***ஆய்வு நோக்கம்:***

*சிற்றிதழ்கள், இணைய இதழ்கள், அச்சிதழ்கள், உள்ளடக்க மாற்றங்கள்*

## Abstract

*Online magazines are coming out from all over the world with the characteristics of a bulletins. Looking at these, we can see how much the influence of Tamil has increased on the Internet today. Today, online magazines are emerging to such an extent that online journalism is a separate field. Looking at these, the print magazines/newspapers that used to provide news to the readers are also now being published on the Internet with the convenience of technology. Such magazines that are being uploaded on the Internet can be considered as reprints. This article is to examine how such magazines are transformed and published on the Internet.*

***Keywords:***

*Bulletins, Internet Magazines, Print Magazines, Content Changes*

**Citation**

Gnanamani, N. "Changes made by Print Magazines on the Internet." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 4, 2024, pp. 25–28.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20095173*

**இணையத்தில் அச்சிதழ்கள் பெற்றுள்ள மாற்றங்கள்**

*நாளிதழ்களாக வரும் அச்சிதழ்கள் இணையத்தில் சில மாற்றங்களைப் பெறுகின்றன. அவற்றில் முதலாவதாகப் பல்லூடகத் தன்மையைப் பெறுகின்றன. முதல் பக்கத்திலேயே அனைத்துச் செய்திகளைப் பற்றிய தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதனால் நாம் நேரடியாகத் தலைப்பினைத் தேர்வு செய்து செய்திகளைப் படிக்க முடிகிறது.*

*பல்லூடகத்தன்மை மின் இதழ்களின் தனித்தன்மையாகும். இதளால் எழுத்தாளர்கள், பல்லூடக வல்லுநர்கள் முதலியோர் இணைந்து இதழ்ப்பக்கங்களை உருவாக்குகின்றனர். புகைப்படச் செய்திகள் அனைத்தும் வண்ணத்தில் அமைகின்றன. இதனால் கூர்ந்து படிக்கும் வசதி கிடைக்கிறது. வாசகர்களிடம் இருந்து ஒவ்வொரு செய்திககளுக்கும் பின்னூட்டம் பெறும் வசதியைத் தருகின்றன. தேவையற்ற வணிக நோக்கில் அமையும் செய்திகளை அச்சிதழ்கள் இணையத்தில் தவிர்த்து விடுகின்றன. விளம்பரங்கள் பெரும்பான்மை இடம்பெறும்பான்மை இடம்பெறுவதில்லை. குறிப்பாக அரசியல் தலைவர்களின் பிறந்தநாட்கள், ஏதேனும் நலத்திட்ட உதவி வழங்கும் விழா போன்ற நாட்களில் அச்சிதழ்களில் ஆக்கிரமிக்கும். ஆனால் இவை இணைய இதழ்களில் முழுவதுமாக தவிர்க்கப்படுகின்றன.*

*அச்சிதழ்கள் தங்கள் பதிப்பினை நிலவியல் எல்லைக்கு உடபடுத்தி மாவட்டம், மாநிலம் எனச் செய்திகளை வெளியிடுகின்றன. இவையே மின்னிதழ்களாக மாற்றம் பெறும்போது உலகத்தமிழர்களை மனதில் கொண்டு செய்திகளை வெளியிடுகின்றன. ஏனெனில் மின்னிதழ்கள் உலகத்தமிழர்கள் அனைவரையும் கருத்தில் கொண்டே நடத்தப்படுகின்றன.*

*ஒவ்வெரு அச்சிதழ்களும் (நாளிதழ்கள்) செய்திகளை மறுநாள் தரும். ஆனால் இவையே இணையத்தில் பார்க்கும்போது உடனுக்குடன் செய்திகளைத் தரவேற்றிக்கொண்டே வருகின்றன. இதனால் எப்பொழுது பார்வையிட்டாலும் புதுப்புது செய்திகள் கிடைக்கின்றன.*

*அச்சிதழ்கள் முதன்மையானச் செய்திகளை முதல் பக்கத்தில் புகைப்படம், செய்திகளோடு தருகின்றன. ஆனால் இதே அச்சிதழ்கள் அச்செய்திகளை வீடியோவுடன் இணையப் பக்கத்தில் வெளியிடுகின்றன. பயன்பாட்டாளர் நோக்கில் அச்சிதழ்களை ஒரு நேரத்தில் ஒருவரால் மட்டுமே படிக்க முடியும். இதுவே இயைத்தில் ஓரிடமாகினும், வெவ்வேறு இடத்திலிருந்தும் எத்தனை நகர்களாகிலும் எத்தளை முறையானாலும் படித்துக்கொள்ள முடியும்.*

*வாசகர்களின் தேர்வு செய்து படிக்கும் எண்ணத்திற்கு ஏற்ப, தேவையான செய்திகளைத் தரவிறக்கம் செய்து படிக்கும் வசதி, முக்கியமான நிகழ்வுகளின் புகைப்படங்களைச் சேமித்யதுக்கொள்ளும் வசதிகளையும், தங்களுக்குத் தேவையான செய்திகளையோ, கட்டுரைகளையோ சமூக வலைத்தளங்களில் இணைத்துக்கொள்ளும் வசதிகள் போன்றவற்றினைத் தருகின்றன.*

*ஒரே எழுத்துரு, ஒரே வண்ணம் என்றில்லாமல் பல்வேறு எழுத்துரு, பல வண்ணற்கள் எனச் செய்திகளைத் தருவதால் பார்வையாளர்கள் சலிப்புத் தட்டாமல் படிக்க முடிகிறது. சி னிமாத் தொடர்புடைய செய்திகள் அச்சிதழ்களை ஆக்கிரமித்துக்கொள்கின்றன. ஆனால் இணையத்தில் இச்செய்திகளைத் தனியாகத் தலைப்பிட்டு தருவதால் தேவைப்படுவோர் மட்டுமே இவற்றைக் காணலாம். இவையனைத்தும் வாசகர்களின் தேர்வுத்தன்மையை வச திபடுத்தும் நோக்கமாகும்.*

*அச்சில் வருகிற இதழ்கள் இணையத்தில் பக்க வரையறைகளைத் தவிர்த்து எவ்வளவு பக்கங்கள் வேண்டுமானாலும் செய்திகளை வெளியிடலாம். அதே போன்று இலக்கியத்துக்கென்று தனியே பக்கங்களை ஒதுக்கி இணையத்தில் வெளியிட்டு வருவது இலக்கிய வளர்ச்சிக்கு துணைபுரிவதாவ அமைகிறது.*

**உள்ளடக்க மாற்றங்கள்**

*அச்சில் வெளிவருகிற பெரும்பாலான இதழ்கள் அனைத்தும் இணையத்தில் இலவசமாகவே வெளியிடப்படுகின்றன. அவ்வாறு வருகிற இதழ்கள் அச்சில் வரும்போது பெற்றுள்ள உள்ளடக்கத்தினை போன்று இல்லாமல் இணையத்தில் தேர்ந்தெடுக்குப் படிக்கும் விதத்தில் உள்ளடக்கத்தினைப் பெற்று வருகின்றன. ஏனெனில் இணையத்தில் உலகம் முழுவதும் சென்றடைகிறது.*

*முதலாவதாக முகப்புப் பக்கத்திலேயே அனைத்து செய்திகளின் தலைப்பினை கொடுத்து விடுகின்றனர். நமக்குத் தேவையான செய்திகளை தேடிச்சென்று படிக்கலாம். மற்றும் உலகம் முழுவதிலும் இதழ்களைப் பார்ப்பதால் உலகத் தமிழர் செய்திகள் என்று தனியே செய்திகளை வெளியிடுகின்றனர். உலகம் முழுவதும் பரவி வாழும் தமிழர்கள் தாம் வாழும் நாட்டில் நடக்கின்ற கலை , இலக்கிய, சமயத் தொடர்பான விழாக்களை செய்திகளோடு வெளியிடுகின்றனர். இதனால் எவ்வாறு அவர்கள் தம் பண்பாட்டு விழுமியங்களை போற்றி வருகின்றனர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. அதே போன்று தமிழகத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்தில் நடக்கும் நிகழ்வுகளை நாள்தோறும் பட்டியலிட்டுத் தருவதால் புலம்பெயர் தமிழர்கள் தன் சொந்த மண்ணில் இருக்கும் உணர்வுகளைப் பெறுகின்றனர்.*

*பெரும்பாலான அச்சிதழ்கள் அனைத்தும் பின்வருமாறு தன் முகப்பு பக்கத்தில் தலைப்பிட்டு செய்திகளை வழங்கி வருகின்றன.*

*தற்போதைய செய்திகள் - தமிழகம் - மாவட்டம் - இந்தியா - உலகத் தமிழர்கள் - விளையாட்டு - சினிமா - இ-பேப்பர் - வார இதழ்கள் - புகைப்பட கேலரி - புத்தக மதிப்புரை - லேடிஸ் - ஹெல்த் - சமையல் - ஆன்மிகம் - சோதிடம் - கார்ட்டுன் - வேலைவாய்ப்பு - கட்டுரைகள் - என்று தலைப்பிட்டுத் தருகின்றன. இவற்றில் நமக்குத் தேவையானவற்றைத் தேர்வு செய்து படித்துக் கொள்ளலாம். ஒவ்வவொரு அச்சிதழும் இணையத்தில் பல்வேறு அம்ச ங்களுடன் செய்திகளை வெளியிட்டாலும், அச்சில் வருவது இதழ்ப் பக்கங்களை அப்படியே நகலெடுத்து இ-பேப்பர் என்று தம் இதழ்ப் பக்கங்களை இணைத்து தருகின்றன. இவற்றில் சிலவற்றிற்று கட்டணமும் உண்டு. இப்பக்கங்களை பெரிதுபடுத்திப் பார்வையிடலாம். அதேநேரம் இணைய இதழ்கள் எவ்வளவு வசதிகளைத் தந்தாலும் அச்சிதழ்களைப் போன்று கையால் தொடும் உணர்வினைப் பெற முடிவதில்லை. அச்சிதழ்களின் அளவு, பயன்படுத்தும் தாள் ஆகியன இதழுக்கு இதழ் மாறுபடுகின்றன. மேலும் இதழ்களைத் தொடுவது, புரட்டுவது, முகர்வது போன்ற நடவடிக்கைகள் அழகியல், உளவியல் சார்ந்த சாதசங்களை அச்சிதழ்சள் வழங்குகின்றன. இவற்றை இணைய இதழ்களால் தர இயலாது.*

*பல்வேறு ஊடகத் தன்மையால் இணையத்தில் அச்சிதழ்கள் மாறுபட்டாலும், இதழியல் பண்புகள், தகவல்களைப் பரப்புதல், தமிழனை அடையாளம் காட்டுதல் எனும் முறையில் ஒத்தப் பண்பினையே கொண்டுள்ளன. இணையத் தொழில்நுட்பம் பெருமளவு எளிமைப் படுத்தப்பட்டு அனைத்து தரப்பு மக்களையும் சென்றடையும் போது இணைய இதழ்களின் தன்மைகள் இன்னும் பல்வேறு மாற்றங்களுக்கு உட்படுத்தப்படும்.*

**துணை நூல் பட்டியல்**


1. *அன்னி தாமசு, இதழ்களில் பெண் சித்தரிப்பு - தகவல் தொடர்பு ஊடகங்களில் பெண்*
2. *பொன்னவைக்கோ மு., இணையத்தமிழ் வரலாறு*
3. *நீலகண்டபிள்ளை தா., ஊடகங்களின் எதிர்காலம்*
4. *டேவிட்பிரபாகர் ப., தமிழில் அறிவியல் பாடமாக்கம்*

5. சோமலெ, தமிழ் இதழ்கள்.
6. உயிருக்கு நேர், உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டு சிறப்பு மலர்.

**References**

1. Annie Thomas, Ithazhgalil Penn Sitharippu – Woman in Communication Media.
2. Ponnavaikko M., Inayathamil Varalaru.
3. Neelakanta Pillai Tha., Udagangalin Ethirgalam
4. David Prabhakar, P., Tamilil Ariviyal Padamaakam.
5. Somale, Tamil Magazines.
6. Uyirukku Ner, World Classical Tamil Conference Special Issue.